2007 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன? திரு. து. அமரமூர்த்தி, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)* One minute. *(குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.*

திரு. து. அமரமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடல், பாடல் நிகழ்ச்சிக்கு* police *தடை விதிக்கிறார்கள், அதிலே ஒன்றும் பிரச்சினை வரப் போவதில்லை. ஜல்லிக்கட்டு என்பதை எல்லாக் கிராமத்திலும் நடத்துகிறார்கள். எல்லாக் கிராம மக்களும்,* police permission *கொடுக்கமாட்டேன் என்கிறார்கள்; சொல்லுங்கள், சொல்லுங்கள் என்று எங்களைத் தொல்லைப்படுத்துகிறார்கள். நடத்துவது என்றால் நடத்து என்று சொல்ல வேண்டும். இல்லாவிட்டால், அது கிராமத்திலே இருக்கிறது. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வீரத்தோடு, விவேகத்தோடு நடந்துகொண்டீர்கள் என்றால் நல்லது என்று சொல்லிவிட்டார்கள் அல்லவா? உட்காருங்கள்.*

(ஈ) சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் வீடு தாக்கப்பட்டது தொடர்பாக

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.*

திரு. மு. கண்ணப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 56-ன்கீழ் என்னுடைய பெயரால் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்திருக்கின்றேன். கடந்த 6-4-2007 அன்று நள்ளிரவில் ஓரத்தநாடு கிராமத்தில் உள்ள, தியாகராய நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்களுடைய வீட்டை 40-க்கும் மேற்பட்டவர்கள் தாக்கி, சேதப்படுத்தி இருக்கின்றார்கள். அங்கே தூங்கிக்கொண்டிருந்த . . . (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கண்ணப்பன் அவர்களுக்கு, அதைக் கவன ஈர்ப்பாகக் கொடுத்திருக்கிறீர்கள். நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். உட்காருங்கள்.*